174

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் நாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-சீலை குருகுலம், மாம்பாக்கம்; விசய, வைகாசி; 12— 6— 53 தளிர்-37

குருகுலத்தின் குறிக்கோள :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## நல் விருந்து

இடையறாது விருந்தோம்புவதிலும் அகமும் முகமும் மலர்ந்து மகிழ்வுடன் ஓம்ப வேண்டும் என்பதும், தக்க விருந்தினரைப் போற்றுதல் ஒரு நற்பேறு என்பதும் இல்வாழ்வோர் அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள்.

விருந்தோம்பினால் வாழ்க்கைக்கு வளம் வரும் என்ற நம்பிக்கையோடு சிலர் செய்வதும் உண்டு. ஆனால் விருந்தோம்புதலே ஒரு பேறு என்னும் மகிழ்ச்சியே குறிக்கோளாக ஓம்புதல் இன்னும் சிறந்தது. இத்தகையோர்க்கு வாழ்க்கை வளம் இயல்பாகவே நிரம்பப் பெருகி வரும்.

இந்த நற்போக்கு உடையவர்க்குச் சிறந்த விருந்தினர்கள் சேர்தலைக் காணுங்கால், அகமும் முகமும் பின்னும் பூரித்து நிற்கும். நல் விருந்தினர் மேல்மேலும் வருதலும் வாய்க்கும்.

உலகத்தில், மேம்பட்ட நிலைகளைக் காணும்போது யாருக்கும் மகிழ்ச்சி உண்டாதல் இயல்பு. செல்வம் என்பது தன்னினும் மேம்பட்ட கல்வியைக் கண்டு மகிழ்வதும், பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் தம்மினும் மேம்பட்ட அருளைக் கண்டு மகிழ்வதும் அதனால் முறையாகின்றன. ஆகவே, தவஞான ஒழுக்கங்களாலும் ஆருயிர்த் தொண்டுகளாலும் சிறந்த நல் விருந்துகள் தலைப்படுதலைக் கண்டு திருமகள் மகிழ்வதும் இயல்பேயாம்.

நல் விருந்து ஓம்புவார் இல்லம், அருள் நடமிடும் இடம்; கலையும் நடமாடும் என்பது சொல்லாமலே பெறப்படும்; அப்படியானால் இவற்றைக் காணும் திருமகளும், தானே அங்கு உறைய விரும்பி நிற்பாள். செல்வப் பொருள், மேல்மேலும் நல்வகையிற் பயன்பட வேண்டும் என்பதைக் கருதி! எனவே, கல்வியும் அருளும் நடமாடும் இல்லத்தில், பொருளும் உடன் நடமாடும் என்பது இதனால் தெளியப்பட்டது.

அருள் அடிப்படையும் கலை அடிப்படையும் இல்லாதார்க்குப் பெரும் பொருள் கிளைத்தல் எவ்வாற்றானும் இல்லை என்பது உலகிற் காணும் உண்மை. முகனமர்ந்து விருந்தோம்புதலும் நல்விருந்து ஓம்புதலும் விருந்தோம்புதலில் கொழுந்து போன்றவை.

அகன் அமர்ந்து செய்யாள்
உறையும்; முகன் அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்—முகம் விரும்பித் தக்க விருந்தினரைப் போற்றுவானது இல்லத்தில், அகன் அமர்ந்து செய்யாள் உறையும்—அக மகிழ்ந்து திருமகள் வாழ்ந்து வருவாள்.

செல்வம் பெருகுதற்கு இது காரணம் கூறிற்று.

அமர்தல், இங்கே மகிழ்வுப் பொருளில் வந்தது; செய்யாள், செல்வத்தின் தலைவி; நிலையாக இருத்தலை, 'உறையும்' என்றார்.

விருந்தோம்புதலில் முதலில் தெரிதல் முகத்தின் இனிமை; ஆதலின் 'முகனமர்ந்து' எனப்பட்டது. மற்று அகனமர்தல் இல்லை என்பதன்று. "முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" என்றார் மேலும்.

கடமைகளிற் கருத்தாய் இருக்கும் விருந்தினருள்ளும் தவஞான ஒழுக்கங்களாகிய சான்றாண்மையும் உடைய விருந்தினராய் இருந்தால், அத்தகைய மேலான விருந்தை ஓம்புதல் பின்னும் நல்லது என்றற்கு 'நல்விருந்து' என்றார். தக்கார்க்குப் பயனாகிச் செல்வம் நல்வழிப் படுதல் அறிந்து திருமகள் அகமகிழ்ச்சி கொண்டு அங்கே உறைகின்றனள் என்பது.

# “முல்லைக் கொடி”

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


“யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா.”
—புறநானூறு.


| இலை | விசய, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 5 | 12-6-53 வெள்ளி | 37 |


## வாழும் வகையும் வழியும்....?

உயிர்களெல்லாம் வாழ்வதற்காகவே பிறக்கின்றன.

ஆனால் மக்கள் தவிர மற்றைய உயிர்கள் தாம் இயற்கையை ஒட்டி என்றும் ஒரே வகையில் பெரும்பாலும் நோயும் நொடியும் இன்றி வாழ்கின்றன...வாழ்ந்து மறைகின்றன.

மக்கள் சிற்றுயிர்களினும் சிறந்த உடலும் உள்ளமும் பெற்றிருப்பதால் அவற்றினும் நன்கு வாழ்ந்து, மாளாமலே இருக்கவோ அல்லது நெடிது வாழ்ந்து உயர் நிலை அடையவோ முயல வேண்டும் என்று தெரிகின்றது.

உண்மையில் மக்களாகிய நாம் அப்படி வாழ்கின்றோமா? நம்முடைய அறிவையும் ஆற்றலையும் விலங்குகளைப் போல் நமக்குள்ளாகப் பூசலும் போரும் பூண்டு கொள்ளாமல் இருக்கவோ, மாளா நிலையை அடையவோ அல்லது மக்களை விட உயர்ந்த நிலைகளைப் பெறவோ செல விடுகின்றோமா?

நாளும் நம்மில் பலர் பசியும் பிணியும் பற்றி அழியவும், காமமும் குரோதமும் கொண்டு பிணமாகக் குவியவும் பார்த்துக் கொண்டு, மக்களுக்குச் சராசரி என்று கூறப்படும் ஒரு நூற்றாண்டு தானும் வாழ மாட்டாமல் மடிந்தொழிகின்றோம்.

இந்நிலைகளை நினைக்கிறபோது சிற்றுயிர்களே, மக்களை விட மேல் போலும் என்று எண்ணத் தோற்றுகிறது.

இது நிற்க, வாழ் விழுந்து நிற்கும் மக்களினத்தை உயர்த்த அவ்வப்போது ஆன்றோர் பலர் தோன்றி அரும் பாடு பட்டிருக்கிறார்கள். இன்றும் பலர் பாடு படுகிறார்கள். அவரவர்கள் கூறும் அறிவுரைகளும், காட்டும் நெறி முறைகளும், அவற்றிற்கு அடிப்படையான உண்மைகளும் அவர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பின்பற்றப்படுபவர்களின் மதமாகவும், சமயமாகவும் (குறிப்பிட்ட ஒரு பெயரால் இல்லாவிட்டாலும்) நிலை பெற்று நலஞ் செய்து வருகின்றன.

இவ்வகையில் உலகத்து நிலவும் பல்வேறு மதங்களையும் சமயங்களையும் மக்கள் தத்தம் நிலைக்குத் தக ஆராய்ந்து (பிறப்பால் போற்றிப் பயனில்லை. ஆகவின்) தமக்குத் தக்கது எனப்படும் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றி உயர்ந்து போகவேண்டும்.

அப்படிப் பின்பற்றுகிறபோது மற்ற மதங்களையோ சமயங்களையோ அவற்றின் பழக்க வழக்கங்களையோ அவற்றின் பயனை அறியாமல் குறை கூறுவதோ, எள்ளி நகையாடுவதோ கூடாது. பேதம் அறிய. விழைவார்க்கு மட்டும் அறிவு நிலைக்கு ஒத்த முறையில் அன்புக்கு மாறுகாத வழியில் உண்மைகளை எடுத்துக்காட்டி விளக்கலாம். ஆனால், அப்போதும் ஒன்றிற் கூறப்படாத உண்மை மற்றொன்றிற் கூறப்பட்டிருப்பது கொண்டும், ஒன்றின் கொள்கை மற்றொன்றில் மறுக்கப்பட் டிருப்பது கொண்டும், இது உயர்ந்தது இது தாழ்ந்தது என்று விளக்கம் செய்யக் கூடாது; பின்பற்றுவார் உள்ளம் வருந்தக் கூடும். ஆதலின் தாங்களை அறிய விழைவார் அவைகளை உணர்ந்து கொள்ளும்படி விளக்கம் செய்தலே சாலும்.

இனி, அறிவளவிலேயே உண்மைகளின் தாரதம்மியங்களை இவ்வளவு நயமாக எடுத்துக்காட்டி விளக்க வேண்டும்என்றால் அவரவர்களும் செயலளவில் தத்தம் நெறி முறைகளுக்கு ஏற்பனவற்றைச் செய்வதற்கு அவ்வச்சமயத்தார்க்கும் மதத்தார்க்கும் முழு உரிமையும் மதிப்பும் கொடுத்து இடந் தர வேண்டும் என்று சொல்ல வேண்டுவதில்லை.

மக்களுக்குள் பிணக்கும் பிளவும் நேராமல், கருத்து வேற்றுமைக்கிடையே அன்பும் ஒற்றுமையும் நிலவி ஒருவர்க்கொருவர் உதவியால் நல் வாழ்வு வாழ்வதற்கு இத்தகைய உயர்ந்த நாகரீகப் போக்கு கட்டாயமாக இருக்கிறது. எல்லா மக்களும் ஒரே நிலையில் உணர்ச்சியில், கொள்கையில், செயல் முறையில் இருக்க முடியாதல்லவா? எனவே

அவரவர் நிலைக்கும், உணர்ச்சிக்கும் கொள்கைக்கும், செயல்களுக்கும் இடந்தரத்தான் வேண்டும்.

மக்களினத்துக்குப் பொதுவாக இழிவும் இழுக்கும் நேராத வரையில் அவரவர்கள் வழியில் அவரவர்கள் தாராளமாகப் போகவும் உயரவும், இத்தகைய நாகரீகப் போக்கு வழி இடந்தருவது நல்லது. இதனால் ஒரு பக்குவம் வந்ததும் தம் நிலையின் தன்மையை உணரவும் வேறுபாடு கருதாமல் மேல் நிலைகளை அறிந்து தழுவவும் மக்களுக்குள் இடம் உண்டாகும்.

நிற்க, இத்தகைய உயர் நாகரீகப் போக்குக் கிடையே எவரேனும் ஒரு கொள்கையாருடைய செயல்கள் பொது மக்கள் வாழ்வுக்கே தீங்கு பயப்பனவாக இருந்தால் அவற்றைக் கண்டித்து ஒழிப்பதற்கும் தயங்கக் கூடாது. களையை நீக்கிப் பயிரை வளர்ப்பது போல (அது எந்தப் பயிரில் இருந்தாலும்) அல்லவை நீக்கி அறம் வளர்க்க முனையவேண்டும். திருவள்ளுவர் போன்ற வாழ்க்கை வழிகாட்டிகள் இத்தகைய சூழ் நிலைகளில் எப்படி நடக்கச் சொல்லியிருக்கிறார்கள் என்று பார்த்து அந்தப்படி வீரமாகச் செயலாற்ற வேண்டும்.

கட்சிகள் ஒன்றுக் கொன்று வேண்டாத நிலையில் பிணக்குண்டு ஒருவர் கொடியை மற்றொருவர் எரிப்பதும், ஒடிப்பதும் ஒருவர் படத்தைச் சிலையை மற்றவர் உடைப்பதும், பிறவும் அவரவர்கள் கொள்கை வளர்ச்சிக்கே ஏலாததும் பொதுவாக மக்கள் இனத்தின் நாகரீகத்துக்கே பொருந்தாததும் ஆகுமல்லவா? இத்தகைய சூழ் நிலைகளில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று பொறுப்புள்ளவர்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

திருஞானசம்பந்தர் போன்ற சமய குரவர்கள் இந்த நிலையிற்றான் சமண புத்த சமயத்தவர்களை அடக்க முற்பட்டார்களே ஒழிய அவர்கள் அச் சமயங்களின் தலைவர்களையோ நற்கொள்கைகளையோ சிறிது கூட யாண்டும் மறுக்கவேயில்லை.

பெண்ணினம் தாழ்ந்தது; அதைப் வெறுக்கும் துறவு நிலையே சிறந்தது; இசை முதலிய கலைகள் மக்களை மாக்களாக்கும் என்பன போன்ற உணர்ச்சிகளைப் பாப்பியும்; குளித்தல், முழுகுதல், தலை கோதுதல், துணி மணிகளை உடுத்தல், வெறுத்தல் முதலியனவெல்லாம் கொல்லா நோன்புக்கு மாறு ஆதலின் அவைகளைச் செய்யக் கூடாது என்றெல்லாம் மக்களை அவ் வழிகளில் பழக்கியும் மக்கள் நாகரிகத்துக்கே, வாழ்வுக்கே கேடு சூழ்ந்த இடைக்காலச் சமண புத்தர்களை அவர்களின் பொருந்தா உணர்ச்சிகளை எள்ளி நகையாடியும், இழித்துப் பேசியும், பொல்லா ஒழுக்கங்களைப் பொறுத்துக் கண்டித்தும் ஒழிக்க முற்பட்டனர் சைவ வைணவ ஆசிரியர்களும் ஆழ்வார்களும். இவ்வளவே அன்றி அவர்களாகட்டும், அவர்களுக்குப் பின் வந்த இந் நாட்டுப் பெருமக்கள் எவராகட்டும் சமண புத்தப் பெருமக்களின் நற்கொள்கைகளையும் நறு நூல்களையும் போற்றாமலும் பாராட்டாமலும் இருந்ததே இல்லை.

இது நிற்க, எதற்கெடுத்தாலும் விதி விதி என்று சொல்லி மத வாதிகளும், சமயச் சழக்கர்களும், மக்களை வாழ்விழக்கும்படி செய்து விட்டார்கள் என்று பகுத்தறிவு வாதிகள் பலர் இன்று குறை கூறுகிறார்கள்.

அத் தவறுதலுக்கு நம் தமிழ்ச் சமயத் தலைவர்களாகிய நாயன்மார்களோ ஆழ்வார்களோ எவரும் சிறிதும் உடந்தையாக இருந்ததாகத் தெரியவில்லை. ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்தர் "அவ்வினைக்கு இவ்வினை ஆம் என்று சொல்லும் அஃது அறிவீர், உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனமன்றே" என்று திருநீலகண்டப் பதிகத்தில் அறிவு கொளுட்டி விதியின் உண்மையை ஒப்புக் கொண்டும், அதை ஒட்டியே நம்முடைய முயற்சிக் கடமையை வற்புறுத்தியும் இருக்கின்றார்.

விதிக்கும் நம் முயற்சிக்கும் அவர் போட்டுள்ள நன் முடிச்சைப் பார்த்துப் பார்த்து இன்புற்று, இன்று கேட்கப்படும் பல சிக்கலான கேள்விகட்கு விடையிறுக்கலாம் என்று தோற்றுகிறது.

"விதி என்று ஒன்று இருக்கிறது, அது நம் முன்னைய வினை கட்கேற்ப இப்போது வந்து நம்மைத் தாக்கும்" என்று மட்டும் நம்பிச் சொல்லிக் கொண்டிருந்தால் பயனில்லை; இனிவருங் காலத்து நம்மை வந்து தாக்கக் கூடிய வினைகளை இப்போதே நன்முறையில் முயன்று இருத்திக் கொள்ளவேண்டும்; முயல வேண்டியது நம் கடமை; அதற்குரிய பயன் இப்போதும் பிறகும் தக்கபடி நம்மைச் சாரும்; எனவே வினை இருக்கிறது என்று நம்பி, அப்படி நம்புவதற்கு அடையாள

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# அருள் துறை

## * அறவோர் வருகை *

18-5-53 திங்கட்கிழமை காலை 7-மணிக்கு உத்தரகாசி சுவாமி ஸ்ரீ சின்மயானந்தர் அவர்களைக் குருகுலத்தினர் பூர்ண கும்பம் மாலை மரியாதைகள் வரிசைகள் மேளவாத்தியங்களுடன் நன்கு வரவேற்றுத் தொண்டமண்டலம் உயர்தரப் பள்ளியில் ஒரு சொற்பொழிவும் ஏற்பாடு செய்தனர். நம் ஆசிரியர் தலைமையில் அரைமணி நேரம் 'சத்தியமும் தன்னை அறிதலும்' என்னும் பொருள் பற்றி விரிவுரை யாற்றினர்.

ஆசிரியர் தம் தலைமை உரையில் "நம் நாடு அருள் சிறப்பு நிறைந்து விளங்குவது. இந்நாட்டில் தோன்றிய சான்றோர் பண்பும் அவர் அருள் நூல்களும் நம்மை ஆட்சி செய்கின்றன. இறைவன் எங்கும் விளங்கியிருக்கின்றான். தனியாக இல்லாத இறைவனைத் தனியாகக் காண முடியாது. அருள் சிறந்த சான்றோர்களின் வாயிலாகத்தான் அவனை அடைய முடியும். 'உபநிஷத்' போன்ற சான்றோர் நூலில் ஒரு குறிப்பு உண்டு. இசையை வீணையின்றி நுகர முடியாது; சங்கின் ஒலியைச் சங்கின்றிக் கேட்க முடியாது; எந்த ஒளியையும் சூரியன் அல்லது சந்திரன் இன்றிக் காண முடியாது. அதுபோல இறைவனைத் தனியாகக் காண முடியாது. இறை பண்பாகிய அருள் ஞானத்தையும் அருள் பெற்ற சான்றோர் வாயிலாகத் தான் பெற முடியும்.

அடிகளார் 'உபநிஷத்'தைப் பற்றி விளக்கி யிருக்கிறார்கள். நம் நாட்டில் உயர்ந்த வரிசையில் வைக்கத் தக்க நூல்களில் 'உபநிஷத்தும் ஒன்று.

"தேவர் குறளும்
திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும்
முனிமொழியும்-கோவை
திருவா சகமும்
திருமூலர் சொல்லும்
ஒருவா சகம்என்று உணர்"

இவை எல்லாம் உயர்ந்த எல்லையில் வைத்து மகிழத் தக்கவை. திருக்குறள் முதலிலும் திருமந்திரம் ஈறாகவும் இடையில் மற்ற நூல்களும் அடங்கி யிருக்கின்றன. இவைகளில் எதைப் பேசினாலும் உபநிஷத்தைப் பற்றிப் பேசிய மாதிரியே; எல்லாம் ஒத்தன என்பதை அநுபவத்தில் அறிய வேண்டும்.

நூலைப் படிப்பதை விடத் தக்க சான்றோர் வாயிலாக நேரே அறிவதும் பெறுவதும் முக்கியம். துறவு கோலம் பூண்டு தியானத்தில் திளைத்திருக்கும் தக்க சான்றோர் வாயிலாக இன்று கேட்கும் வாய்ப்புப் பெற்றிருப்பது மிக மகிழ்ச்சி அளிக்கிறது. சிறந்த சான்றோர்களைக் குருகுலம் வரவேற்று இப்படிப் பயன் பெறுவது நல்லது".

பின்னர், அடிகளார் உதவிய விரிவுரையின் சுருக்கம்: நான் தமிழில் பேச இயலாதிருப்பதைப் பற்றி மன்னிக்கவும். சத்தியமும் அதை அநுபவத்தில் பெறுவதும் என்னும் தலைப்பில் பேச எத்தனிக்கிறேன். நீங்கள் எல்லோரும் அருள் துறையில் நன்கு பதப்பட்டவர்கள் என்பதை நீங்கள் சிவபுராணம் ஓதி வழிபாடு செய்ததிலிருந்தே அறிந்தேன். உண்மையானவன் இன்று வேதாந்த நுட்பங்களில் ஆழ்ந்து போய் இறைவனைத் தேடிச் செல்கிறான். இறைவனே சத்தியம் எனக் காண்கின்றான். அது தோற்றமும் ஈறுமில்லாதது; பிறப்பிறப்பில்லாதது. தோற்றமிருக்கிறதென்றால் அதற்கு என்றாகிலும் ஒருநாள் அழிவு இருக்கிறது. அழிவற்று என்றும் ஒரே தன்மையில் விளங்குபவன் இறைவன்; நித்தியானந்தன்; சச்சிதானந்தன், அப்படிப்பட்ட இறைவனையடையக் குருவை நாடுகிறான் அன்பன். பிறவிகள், செல்வம், சூழல்கள், குணங்கள் முதலியவைகளில் ஒன்றற்கொன்று பேதப்பட்டிருப்பதேன்? ஏழை பணக்காரன் அங்கஈனன், மேதாவி, முட்டாள் முதலிய பேதங்களேன்? இதற்குக் காரணமென்ன? எனக் கேட்கிறான். அவர் 'தத்துவமசி' பெனும் மாஹாவாக்கிய விளக்கம் செய்து அவனை இறை அநுபவத்திலிருத்துகிறார்? அவன் சந்தேகங்கள் தீர்க்கப் பெற்று இறை ஞானமடைந்து இறைவனோடு இரண்டறக் கலக்கும் முத்தியருளுகிறார்.

அநுபவம் பெற்றவனும் ஞாபகப் படுத்துபவனும் ஒருவனாகவே

இருக்க வேண்டும். என் அநுபவம் பற்றி உங்களுக்குத் தெரியாது உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இறைவன் எங்கும் விளங்கி எல்லாம் அறிபவன். உதாரணமாக இந்த என் உடலில் ஒரே உயிர் குழந்தைப் பருவத்தும் இளமையிலும் முதுமையிலும் இருக்கிறது. என் குழந்தைப் பருவத்து அநுபவம் இன்று ஞாபகப படுத்த முடியும். என் முதுமையிலும் அப்படியே. என் முன் வாழ்க்கை ஞாபகங்கள் அறிய முடியும். ஆதலால் இந்த உடலில் உயிர் போன்று இறைவன் எல்லா உயிர்களிலும் ஊடுருவி நிறைந்து விளங்கி அநுபவப் படுகிறான். இந்த ஆக்மா தான் இறைவன். மின்சார சக்தி நியூயார்க்கிலிருப்பதற்கும் இங்கிருப்பதற்கும் பேதமுண்டா? இதே சக்தி விளக்கை எரிக்கிறது, விசிறியைச் சுழற்றுகிறது, பிரிஜிடேரி (Frigi dairi)யில் குளிர்விக்கிறது. அதே போல் ஒரே இறைவன் எல்லா உயிர்களிலும் ஊடுருவி நின்று விளங்குகிறான். தாவர வர்க்கங்களிலும் விலங்கு, பறவை, நீர் வாழ்வன மனிதன் முதலிய எதிலும் ஒரே இறைவன் விளங்குகிறான்.

நான் என்னும் ஆக்மா குழந்தைப்பருவத்தும் இளமையிலும் முதுமையிலும் ஒன்றாகவே யிருக்கிறது. ஆனால் உடல் பருவத்திற்கேற்றபடி வலிமை உற்சாகம் குறைந்தும் மிகுந்தும் இருக்கிறது. சதையில் தான் பேதமும் தளர்ச்சியும் உண்டாகின்றன. அழுக்கடைந்ததும் கிழிந்தது மான சட்டையை வீசி எறிந்துவிட்டு வேறொன்று புதியதாகத் தூயதாகப் பெற நாடுவது போல் முதுமையடைந்து தளர்ந்துவிட்ட இச் சரீரத்தைப் போட்டுவிட்டு வேறு புது சரீரத்தைப் பெற நாடுகிறது ஆக்மா. அபஸ்வரமாக வாசிக்கும் புல்லாங்குழலை வீசிவிட்டுப் புதுக் குழல் பெற விழையும் கலைஞனைப் போல.

இவ்வுலகில் சாதாரணமாய் எல்லோரும் ஒரே விதமாக நடந்துகொண்டு பிறப்பிறப்புக்களில் ஓயாமல் சிக்கி உழன்று கொண்டிருக்கிறார்கள். தானும் இறைவனைப்போல ஆகக் கூடுமென்னும் நினைப்புமின்றித் தன்னையறிய முயற்சி செய்யாமலுமிருக்கிறார்கள். இறைவன் எங்கோ தூரமாய்க் கைலாயத்திலோ வேறெங்கோ இல்லை. மிக மிகச் சமீபமாக நமக்குள்ளேயே இருக்கிறான். நம் இதய கமலத்தில் வீற்றிருக்கிறான். என்றும் பிரியாது விளங்கி வசிக்கிறான். தக்க ஆசிரியர் துணை கொண்டு அவனை அங்கே அறிய முற்படுங்கள்."

—மோகன[illegible]கன்.

# "பிஞ்சிலே பழுத்தது"

உலகில் மக்கள் இளைஞரைப் பிஞ்சென்றும், முதியோரைப் பழமென்றுங் கூறுதல் மரபு. அங்ஙனமே, அறிவு முதிர்ந்தோரைப் பழமென்றும், வயதில் மூத்தும் அறிவு முதிராதாரைக் காயென்றும் கூறுதலும் வழக்கத்திலிருந்து வருகின்றது.

ஒழுக்க நிலையில் நின்று புலன்களைப் பல துறையில் பழக்குவோரிடம் அறிவாற்றல் மிகுதிப் பட்டிருக்கின்றது. வயது முதிர்ந்தோர் நல்ல துறையில் பழகியிருந்தால் நீண்ட காலத்திற்கேற்ற மிகுந்த அறிவையும் பெற்றிருப்பார்கள். சூழ்நிலையும், தன் முயற்சியும் அறிவைப் பெருக்குமாயினும் அவ்வப்பருவத்தில் உணரும் அறிவை முதியவர்கள் துய்த்து அறிந்தது போல் இளைஞர் அறிந்திருக்க முடியாது. வயதிலும், அறிவிலும் முதிர்ந்தோர் அறிந்த உண்மையை இளைஞன் ஒருவன் அறிந்தானாயின் வயதில் பிஞ்சாயினும் அறிவிற் பழமேயாவான். அவனைப் பிஞ்சிலே பழுத்தான் என்று கூறுவதில் தவறில்லை. ஆனால், மக்கள் இந்தச் சொல்லை ஆளுகின்ற விதம் வேறாயிருக்கின்றது. அஃதாவது, பெரியவர்களை விட அறிவில் மேம்பட்டவனாகக் கருதிப் பேசும் ஒருவனைப் பற்றி இகழ்ந்து கூறுங் கூற்றாக வழக்கத்திலிருந்து வரு

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்


யுனைடெட் கன்ஸர்ன்,
[illegible] தெரு,:: சென்னை 1.

கின்றது. இஃது வழக்கத்தில் வந்தவாறு என்னே என்று சற்று ஆராய்வோம்.

இறைவன் மக்கள் இன்னலைப் போக்க மக்கள் உருவிலேயே வர வேண்டியிருக்கின்றது. அன்றொருநாள் மக்கள் துயர்தீர்க்கப் பரமன் முருகனாய் வந்தான். மகனறிவு தந்தையறிவு ஆதலின் குமாரனாக வந்த முருகன் ஞானத்திலும் பரமனாய் விளங்கினான். பிரணவப் பொருளை ஓதாதுணர்ந்த முருகன், அஃதறியாத பிரமனைச் சிறையிலிட்டான். பரமன் அதை ஒரு வாய்ப்பாக வைத்துக் குருவிடம் மாணாக்கன் நடந்து கொள்ள வேண்டிய விதத்தை உலகிற்கு அறிவிக்க எண்ணினான். எனவே, தான் அறிந்த ஒன்றைத் தநயனிடம் மாணாக்கனாயிருந்து கேட்டான். (இந்த உண்மையை விளக்கி நிற்பது சுவாமிமலை.) குமான் குருவாயிருந்து பரமனுக்கு ஓதியதைக் கண்டு மகிழ்ந்த மக்கள் 'தகப்பன் சாமி' என்று புகழ்ந்து போற்றினார்கள். அன்றியும் இளமையோடிருக்கும் முருகன் முதிர்ந்த ஞானத்தையும் பெற்றுள்ளானதலின் 'பிஞ்சிற் பழுத்தான்' என்று (நிந்தாஸ் துதியாக) மக்கள் கூறி மகிழ்வாராயினர். அன்று முதல் பெரியோர்க்கு விஞ்சின பிள்ளைகளைப் பிஞ்சிற் பழுத்தது என்று மக்கள் கூறிவரலாயினர்.

(நேரிசை வெண்பா)

பிஞ்சிற் பழுத்தான்
பிரணவத்தைத் தேருத
கஞ்சனைக் காய்ந்தான்முக்
கண்ணனுக்குச்-செஞ்சொற்
குருவா யிருந்தண்மை
கூறினான் ஊரார்
முருகனாய் நின்றான் நம்
முன்பு.

—வே. சா. ஏகாம்பரம்.

# பணித் துறை

## * "அடக்கம்" *

(நாராயணசாமி)

"அடக்கம் ஆயிரம் பொன்" என்பது பழமொழி. அடக்கமே மனித வாழ்வை உயர்த்துவது. அது ஒரு வாழ்க்கை நியதி. அடக்கம் பெருந்தன்மையான பொறுமையோடு ஒட்டிய தொடர்பு கொண்டது. இம்மூன்றும் ஒன்றுக் கொன்று பிரிக்க இயலாது. பெருந்தன்மை உள்ள இடத்தில் பொறுமையும், அடக்கமும் இருந்தே தீரும். களேபரமான நிலையால் சூழப்பட்டுள்ள உண்மையை நிலை நிறுத்திக் கொள்ளும் மன வலிமையற்ற இவ்வேளையில், மாந்தர் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாது தவறான அபிப்பிராயங் கொண்டு அதனால் இன்னல் பட நேரிடுகின்றது.

இரு பிரிவு:

தன் குமாரனைப் பிற்காலத்தில் சிறந்தவனாக ஆக்க வேண்டும் என்று பெற்றோர் பாலனைத் தவறாமல் பள்ளிக்குச் செல்லும் படியாகவும், விளையாடாமல் எப்பொழுதும் பாடங்களையே படிக்கும் படியாகவும், அவனைக் கட்டாயப்படுத்தித் தன் வழிக்குக் கொண்டு வர முயற்சிப்பர். பாலன் விளையாட்டையே நோக்கமாகக் கொண்டவனாதலால், அவன் போக்கை நன்கறியா ஆசிரியர், தான் கற்பிக்கும் பாடங்களைச் சரிவரக் கற்றுக் கொள்ளவில்லையெனத் தண்டிப்பர். இவ்விரண்டு இடத்தாலும் அச்சுறுத்தப்படும் பாலன் பேழைப் பாம்பென அடங்கி, அவர்களைக் கண்டதும் அஞ்சி நடுங்குவான். இவ்வகை அடக்கம் அச்சத்தின் அடிப்படையில் எழுந்தது.

ஒருவர் தாம் நினைக்கும்படி எல்லாம் நடக்க, தக்கவாறு அனுசரணைக்குட்படும்போது அவ்வெண்ணம் உண்மைக்குப் புறம்பான தாயின் தீமை விளையும். தாம் கொள்ளும் போக்கையே பிறரெவரும் பின்பற்ற வேண்டும் என்னும் முரட்டுப் பிடிவாதம் முதன்மை ஊக்கத்தினால் தாக்கப்பட்டுப் பிறரை அடக்கியாளும் தன்மையடைகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் அச்சம் குடிகொண்டவர்களாய் அடங்குகின்றனர். உதாரணமாக மனிதரில் உயர்வும் தாழ்வும் கற்பித்துத் தாழ்ந்தவன், உயர்ந்தவன், ஆண்டை, அடிமை என்ற தாழ்ந்த மனப்பான்மைகள் எழக் காரணம் என்ன? தன்னெடுப்புக் கொண்டவர்கள், தன்னெடுக்கம் கொண்டவர்கள்மேல் ஆதிக்கம் செலுத்தவும், தூய்மை செய்யாத இயல்பூக்கத்தினால், பாதுகாப

பட்ட தன்னடக்கமுடையவர்கள் அச்சத்தினாலும், அடக்கமுடையவர்களாவார்கள். இவர்கள் உள்ளத்தெழுச்சிகளும், முயற்சிகளும் பிறரால் முறியடிக்கப்படுவதால் எப்பொழுதுமே அச்சம் அவர்களை விட்டு நீங்காது. அவர்கள் உள்ளத்தில் தங்களைப்பற்றியே ஒரு தாழ்ந்த அபிப்பிராயம் எழ இடமுண்டு. எழுத்தாளனாக ஆக வேண்டும் என்னும் அவாக்கொண்ட ஒருவரின் முயற்சி பாராட்டப்படுமாயின் ஓங்கி வளரும். அதைப் பலவீனத்தினாலும் குறை கூறுவோமாயின் 'தாம் அந்த நிலையை அடைய முடியாது என்னும் எண்ணம் எழுந்து அவர்களை அடக்கி ஆளும்.

கைகட்டி, வாய் பொத்தி ஆண்டைக்குக் குற்றேவல் புரியும் மனிதரிடமும், அவர்களை அடக்கி ஆளும் மனிதரிடமும் அரிய சக்திகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அது இளமையிலேயே ஆரம்பத்திலேயே தூய்மை செய்யாத காரணத்தால் இன்று பெரிய விபரீதத்தை உண்டாக்கிவிட்டது.

ஒருவரிடம் நாம் கொண்டுள்ள அன்பின் காரணமாகவும், மதிப்பின் காரணமாகவும் அடக்கத்தோடு மரியாதையாக நடந்துகொள்ளல் அடக்கத்தின் மற்றொரு பிரிவாகும். இத்தகைய அடக்கமே உள்ளுறவையும் முன்னேற்றத்தையும் தரவல்லது. உலக முன்னேற்றத்துக்கும் பிற்போக்குக்கும் காரணம் மாந்தரின் மனப் பண்புகளன்றோ! இவ்வகை அடக்கம் பரவாததே, மாந்தர் யாவரும் உணராததே, உலகக்கிளர்ச்சிக்குக் காரணம்; 'செல்வம்' தன்னிடமுள்ளது என்ற காரணத்தாலோ, 'அதிகாரம்' தன்னிடமுள்ளது என்ற காரணத்தாலோ, 'அறிவு' தன்னிடமுள்ளது என்ற காரணத்தாலோ, 'மிருக பலம்' தன்னிடமுள்ளது என்ற காரணத்தாலோ இறுமாந்து ஒருவர் மேல் ஆதிக்கங் கொள்ளல் ஒக்குமோ? இவையெல்லாம் ஒருவரிடமே நிரம்பிக் காணப்பட்டாலும் அன்புடனும், பிறரை மதித்தும், தகைமையுடனும் நடந்து கொள்வதன்றோ அடக்கம். அடக்கத்தின் இவ்விரண்டு பகுதிகளையும் உன்னுங்கால் எது மனித வாழ்க்கைக்கு ஏற்றது என்பது நன்கு புலனாகும்.

உண்மை நிலை:

பலர் 'அடக்கத்'திற்கு வெவ்வேறு விதமாக வியாக்யானம் செய்வார்கள். ஆசிரியரிடம் மாணவனும், தந்தையிடம் மகனும், பெரியவரிடம் சிறியவரும் கை கட்டி, வாய் பொத்தி, கல்லெறியும் இடத்தை நோக்கி விரையும் நாய்போல் அவர்கள் வீசும் சொல்லம்பின் முனை நோக்கி விரையும் சூத்திரப்பாவையென இருத்தலே அடக்கமாமோ? ஆட்டுவித்தால் ஆடவும், சொல்வதைச் சொல்லவும் மனிதர்கள் அறிவற்றவர்களாகவோ, மனப்பண்பற்றவர்களாகவோ, சிறிதளவேனும் சிந்திக்கும் திறனற்றவர்களாகவோ இல்லை. ஒவ்வொரு மனிதனிடமும் பல அரிய சக்திகள் அழுங்கிக் கிடக்கின்றன. அவரவர்களின் இயற்கை அறிவு விருத்திக்கும், மனப் பண்புகளின் வளர்ச்சிக்கும் உதவுவதே ஒருவர்க்கொருவர் நேசபாவத்தையும், நிரந்தரச் சமாதானத்தையும் நிலைநிறுத்திக் கொள்ளும் வழியாம். அறிவு, உணர்ச்சி, செயல் இம் மூன்றினாலும் ஒவ்வொரு மனிதரும் பிணைக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று உலகில் மேதைகள் என்று போற்றப்படுவோர் தம் இயற்கைச்சக்திகளை விருத்தி செய்துகொண்டதினாலன்றோ அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க முடிந்தது. இவ்வாறு மனித முயற்சி முன்னேற்றத்தை நோக்கி வேகமாக ஓடும்போது, இடையில் முட்டுக் கட்டை போட்டு மறித்தல் நலமோ? அடிமையாய் அடக்க வாழ்வு நடத்துவதும், செருக்காளனாய் உயர்ந்த இடத்தில் இருப்பதும் மனிதரின் இழிநிலைக்குக் காரணமாம். செல்வச் செருக்கினாலும், மதத்தின் பெயராலும் மக்களை ஒடுக்கிச் செயலற்றவர்களாக ஆக்குவது பண்பற்ற கொடுஞ்செயலாகும்.

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கந்தப்பமுதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு, சென்னை 1.

எண்ணத்தில் தூய்மையும், செயலில் திறமும், வாழ்வில் இன்பமும் கிட்ட மனிதர்களுக்குச் சுயேச்சை தேவை. ஒருவர்மேல் ஒருவர் ஆதிக்கங் கொள்ளாது, அவரவர்கள் தன்னாலான உதவியைப் பிறருக்குச் செய்து, அந்நியோன்யமாக வாழ்தலே உலக முன்னேற்றத்துக்கு வழியாம்.

---

(3-ம் பக்கம் தொடர்ச்சி

மாகவேனும் இப்போதைய வினைகளை (முயற்சிகளை) த் தக்கவாறு அமைத்துக் கொள்ளாதிருப்பது ஊனமல்லவா?" வெற்றி தோல்வி பற்றிக் கருதாமல் விதிப்படி அமையட்டும் என்று எண்ணி நன் முயற்சியில், அதற்கேற்ற நற் பயனை அது பின் விதியாக இருந்து கூட்டுமாதலின் சோராதிருக்க வேண்டும்" என்பன போன்ற அறிவுரைகள் எல்லாம் மேற் குறிப்பிட்ட பாடலின் இரண்டடிகளிலேயே மின்னவிட்டுக்கொண் டிருக்கின்றன அல்லவா?

வாழ வேண்டிய வகையும் வாழவைக்கும் வழியும் திருஞான சம்பந்தரின் வாழ்க்கைச் செயலிலும் பாடலிலும் இருந்து மேலே காட்டிய உண்மைகளினால் நன்கு விளங்குகின்றன. அவற்றின்படி வாழ வேண்டுமே! வாழ முயல்வோமாக! முயல வேண்டுவது நம் கடமை அல்லவா?

—ந. ரா. ஆடலரசு.

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros;**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# கலைத் துறை

## நாடகம்—நடுவு நிலை

அன்று மூன்றும் சனிக்கிழமை. காரியாலய விடுமுறை நாள். காலத்தை எப்படிக் கழிப்பது என்று கருதியிருந்த நான் 'பள்ளி மன்ற ஆண்டு விழா, நடக்கப் போகிறது என்று கேள்விப்பட்டு இந்து உயர் நிலைப் பள்ளி (மதுராந்தகம்) க்குச் சென்றேன்.

'நீ ஏன் பிறந்தாய்' என்ற குரல் கேட்டது. என் பிறப்பைப் பற்றி இவர்களுக்கென்ன கவலை? இவர் யார் என்னைக் கேட்பது என்று நினைத்துத் தைரியமாக உள் நுழைந்தேன்.

'வாழ்க வாழ்கவே வாழ்கவே' இது என்ன! வெளியே இருந்த போது வேதனைக் குரல். உள்ளே வந்தால் ஒய்யார வரவேற்பு. இதனால்தான் பெரியவர்கள் கூட 'எப்போதும் மேனோக்கோடு எந்தக் காரியத்தையும் கண்கொண்டு காணாதே. ஆழ்ந்து ஆராய்ந்தால் ஆனந்தம் அடைவாய்' என்று சொல்லி வைத்துச் சென்றார்கள் போன்று இருக்கின்றது என்று நினைத்தேன்.

எனக்களித்த இந்த முன்னுக்குப் பின்னான வரவேற்பு ஒலிப் பெருக்கிதான். கூட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. படக் காட்சியின் இசைத் தட்டுகளை ஒலி பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

அறிஞர்கள் பேசினார்கள் ஒரு சிறு நாடகம் நடைபெற்றது. வலைஞன்—அவன் மனைவி. மனைவி மணாளனிடம் கெஞ்சுகிறாள்.

தனக்கு நீண்ட கழுத்துள்ள நிறம் வெள்ளையாயுள்ள ஒன்று வேண்டும் என்று.

கெண்டை விழியை அவள் விழிகள் கவனப்படுத்த, எடுத்து வருகிறேன் என்று வாக்குக் கொடுத்துவிட்டுச் செல்கிறாள்.

தன்னுடைய நண்பனான வேடுவனின் உதவியால் ஒரு கொக்கைப் பிடித்துக்கொண்டு வருகிறான்.

தனக்கு நேரமாகிவிட்டதென்றும், ஆகையால் அதை உணவாக ஆக்கி, பகல் வேளை உணவாகத் 'தொழிற் றுறை' க்குக் கொண்டு வரும்படியும் சொல்லி விட்டுச் செல்கிறான்.

உச்சிப் பொழுதடைந்தது. நேரங் கடந்தது; காலங்கடந்தது. பசியும் உச்சி நிலையையடைந்தது. கோபம் கொதித்தெழுந்து வந்தது.

ஆனால் மனைவி வரவில்லை.

கடைசியில் வந்தாள். பூனை, நாய் வரவேற்பாகத்தான் இருந்தது.

'ஏலே! ஏன் காலங் கடந்து வந்தாய். திமிரா?'

(வரும்)

பதிந்து அச்சிட்டு வெளியிடுவோர்; இ. சு. பாலசுந்தரம்; ஞானகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம். (அஞ்.)